DEPOSITION OF WITNESS

(Chapter of XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, SRIVILLIPUTTUR

**S.C.No.97/2022**

**LW 3= PW3** **Date.07.4.2026**

Deposition of : PW3 Witness for prosecution /Defence/Court

| | | | |
|---|---|---|---|
| Name | : மகாலட்சுமி | Caste | : |
| Father's Name | : | Religion | : |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

---

**எதிரிகள் ஆஜர் – எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

முதல் விசாரணை –

நான் 11ம் வகுப்பு வரை படித்து விட்டு மாரியம்மன் கோவில் தெரு மேலப்பட்டியில் எனது தாய் தந்தையாருடன் வசித்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது பெரியப்பா, பெரியம்மா ஆவார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 10.2.2021ம் தேதி நான் எனது பெரியப்பாவான ராமர் வீட்டில் இருந்தேன் . எனது பெரியப்பா தான் என்னை வளர்த்து வந்தார். அன்றைய தேதியில் மாலை 6.00 மணியளவில் நான் எனது பெரியப்பா வீட்டில் இருக்கும் போது ஆஜர்எதிரிகள் இருவரும் கையில் அருவாளுடன் என்னிடம் வந்து உனது பெரியப்பாவை என்றைக்குனாலும் வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என்று சொன்னார்கள். மறுநாள் 11.2.2021ம் தேதி அதிகாலை 3.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் என் பெரியப்பா வீட்டில் தீ வைத்து விட்டார்கள். தீ வைத்ததில் எனது 11ம் வகுப்பு படிப்பு சம்பந்தப்பட்ட புத்தகப்பையோடு சேர்ந்து எரிந்து விட்டது. எனது ஜாதி சான்றிதழ் மற்றும் வங்கி பாஸ்புத்தகம் ஆகியவை சேர்ந்து எரிந்து விட்டது. எனதுபெரியப்பா வீடு கூரை வீடு அந்த வீட்டை ஆஜர்எதிரிகள் தீவைத்து விட்டு EXL இரண்டு சக்கர வாகனத்தில் சென்று விட்டார்கள். எனது பெரியப்பா எனது தூரத்து உறவினராக தனலட்சுமி என்பவருக்கு சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அவருக்கு உதவி செய்த காரணத்தினால் முன்விரோதம் காரணமாக ஆஜர் எதிரி ராமர் எனது பெரியப்பா வீட்டிற்கு தீ வைப்பதற்கு முன்பு தனலட்சுமியை கூட்டி சென்று

விட்டு மறுநாள் எனது பெரியப்பா வீட்டில் தீ வைத்து விட்டார். தீ வைத்தது சம்பந்தமாக இருவரும் பேசி சமாதானம் பேசிவிட்டார்கள். தீ வைத்ததினால் எனது படிப்பு எல்லாம் பாழாகி விட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக நான் வேற எதுவும் சொல்ல விரும்பவில்லை. என்னை போலீஸார் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை – 1,2 ஆஜர் எதிரிகள் தரப்பில்

நான் 11ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன் என்பதை காட்டக்கூடிய ஏதாவது ஆவணம் போலீஸ் விசாரணையில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் மேற்சொன்ன முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகளைதான் போலீஸார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் பள்ளி படிப்பே படிக்க வில்லை என்றாலும் 11ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன் என்றுவழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

சாட்சிகளின் வாக்குமூலம் எதிரிகளின் முன்னிலையில் தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/-M.Akiladevi)
உதவி அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.